Koviloor Digital Library

லெட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடு—4

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவருட்பாத் திரட்டு

அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை!!



" எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே யேத்து "

பதிப்பித்தவர் :

ந. சொ. அரு. அருணாசலன்

" ஸ்ரீ முத்துக்குமார் "
தியாகராய நகர்
சென்னை.

A. No. 17146
R65 : வள்ள

Koviloor Digital Library

வித்தியாசாலை வெளியீடுகள்

1 விவேகானந்தர் வீர மொழிகள்
2 திருப்புள்ளிருக்கு வேளூர்ப் புகழ்மாலை
3 திருவாசகம்
4 திருவருட்பாத் திரட்டு
5 திருநாரையூர்த் திருமுறை
6 திருவளர் தாமரை
7 திவ்வியப் பிரபந்தத் திரட்டு
8 முத்து நற்றுமம்
9 பாராயணத் திருமுறை
10 திருமுறை மலர்
11 திருப்புகழ்த் திரட்டு
12 திருமூலர் திருமந்திரம்
13 மதிமலி புரிசை
14 சிவசிவை திருமணம்

நூல் அஞ்சலுக்குத் தேவையான தபால் பில்லை அனுப்பினால் வெளியீடுகள் இலவசமாக அனுப்பப்படும்.

1 ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார்
"ஸ்ரீ முத்துக்குமார்"
சரவண முதலியார் தெரு,
தியாகராய நகர், சென்னை-17.

2 தலைமை ஆசிரியர்
சொக்கலிங்க வித்தியாசாலை
லெட்சுமிபுரம் P. O. கானாடுகாத்தான் வழி.
(இராமநாதபுர மாவட்டம்)

Koviloor Digital Library

லெ. இராமநாதன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
சோக்கால் ஊரணித் தெரு,
சிவகங்கை - 623 560

லெட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடு — 4

4 - 3

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருவருட்பாத் திரட்டு

அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங் கருணை !!





லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
சோக்கால் ஊரணித் தெரு,
சிவகங்கை - 623 560.

"எல்லாம் செயக்கூடும் என்ஞணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே யேத்து"

பதிப்பித்தவர் :

ந. சொ. அரு. அருணசலன்

விகாரிஞு
ஆவணிமீ 21உ
6-9-1959

ஸ்ரீ முத்துகுமார நிலையம்
தியாகராய நகர்
சென்னை.

Koviloor Digital Library

முதற் பதிப்பு : 1942
இரண்டாம் பதிப்பு : 1959

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

Koviloor Digital Library

4-3

முகவுரை

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய 'திருவருட்பா' கற்ருர்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாய் விளங்குகின்றது. இவ் வள்ளலார் கல் மனத்தையும் நெகிழ்விக்கும் நல்லியற் கவிஞர்; சமரச சன்மார்க்கம் காட்டிய சான்ருேர்; அருளறம் பூண்ட பெரியார்.

சிவமணமும் கவிமணமும் கமழும் திருவருட் பூங்காவிலே சில நறு மலர்களைக் கொய்து சொக்கலிங்க வித்தியாசாலையின் பதினைந்தாவது ஆண்டுவிழாவில் மெய்யன்பர்கட்குக் கையுறையாகக் கொடுக்க ஆசை யுற்றேன். என் கருத்தை நிறைவேற்றி அருளிய நண்பர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை யவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகும்.

ந. சொ. அரு. அருணசலன்.

Koviloor Digital Library

உ

அருள் பழுத்த செழுங்கனியே, அகம் பழுத்த
சிவஞான அமுதே, முத்திப்
பொருள் பழுத்த 'அருட்பாவை' எமக்களித்த
தெய்வமணப் பூவே, என்றும்
மருள் பழுத்த அடியேங்கள் மன இருளை
அகற்றவரு மணியே, மெய்ம்மைத்
தெருள் பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க
நின்னருளைச் சிந்திப் பேனே.

Koviloor Digital Library

4-3



Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி ! தனிப்பெருங் கருணை !!

திரு அருட்பா

கணபதி தோத்திரம்

முன்னவனே யானை முகத்தவனே
முத்திநலம்
சொன்னவனே தூய்மைச்
சுகத்தவனே—மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே
செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண். 1

வேறு

நாவினாலுனை நாடொறும் பாடுவார்
நாடுவார்தமை நண்ணிப் புகழவும்
ஓவிலாதுனைப் பாடவும் துன்பெலாம்
ஓடவும்மகி ழோங்கவுஞ் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்
கடவுளே நற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 2

Koviloor Digital Library

முருகன் தோத்திரம்

(பிரார்த்தனை மாலை)

சீர்கொண்ட தெய்வ வதனங்க
ளாறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத்தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும் நற்
கோழிக்கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத்
தணிகாசலமும் என் கண்ணுற்றதே. 3

வேல்கொண்ட கையும் விறல்கொண்ட
தோளும் விளங்குமயில்
மேல்கொண்ட வீறு மலர்முகம்
ஆறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலும்
கண்டாலன்றிக் காமனெய்யும்
கோல்கொண்ட வன்மை யறுமோ
தணிகைக் குருபரனே. 4

(செழுஞ்சுடர் மாலை)

அடுத்தே வருத்தும் துயர்க்கடலில்
அறியா தந்தோ விழுந்திட்டேன்
எடுத்தே விடுவார் தமைக்காணேன்
எந்தாய் எளியேன் என்செய்கேன்
கடுத்தேர் கண்டத் தெம்மான்தன்
கண்ணே தருமக் கடலேயென்
செடித்தீர் தணிகை மலைப்பொருளே
தேனே ஞானச் செழுஞ்சுடரே. 5

Koviloor Digital Library

(ஜீவசாட்சி மாலை)

தணிகா சலம்போய்த் தழையேனே
சாமி திருத்தாள் விழையேனே
பணிகா தலித்துப் பிழையேனே
பாடி மனது குழையேனே
திணிகா ணுலகை அழையேனே
சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனே
பிணிகா ணுலகிற் பிறந்துழன்றே
பேதுற்றலையும் பழையேனே. 6

(தெய்வமணி மாலை)

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறிபிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும்நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 7

Koviloor Digital Library

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில் அரசே!
தாருண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. 8

இராம நாமத் திருப்பதிகம்

அறம்பழுக்கும் தருவே என் குருவே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கைஇரா வணனைப் பண்டோர்
வாளியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ளலேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே. 9

திருமகள் தோத்திரம்

உலகம் புரக்கும் பெருமான்தன் உளத்தும்
புயத்தும் அமர்ந்தருளி

Koviloor Digital Library

உவகை யளிக்கும் பேரின்ப உருவே
எல்லாம் உடையாளே
திலகஞ் செறிவாள் நுதற்கரும்பே தேனே
கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே தித்தித்
தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே
என்கண் மணியேஎன்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே
ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி தடங்கண்
திருவே கண்ணமங்கைத்
தாயே சரணம் சரணம் இது தருணம்
கருணை தருவாயே. 10

கலைமகள் தோத்திரம்

கலைபயின்ற உளத் தினிக்கும் கரும்பினை
முக்கனியை அருட் கடலை ஒங்கும்
நிலைபயின்ற முனிவரரும் தொழுதேத்த
நான்முகனுர் நீண்ட நாவிற்
றலைபயின்ற மறையின்று மூவுலகும்
காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
யம்மையைநாம் சிந்திப்போமே. 11

(குரு தோத்திரம்)

திருஞானசம்பந்த சுவாமிகள்

சீரார் சண்பைக் கவுணியர்தம் தெய்வ
மரபிற் றிகழ்விளக்கே

Koviloor Digital Library

தெவிட்டா துளத்தில் தித்திக்குந் தேனே
அழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின்
முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என்னிரண்டு கண்ணே
கண்ணிற் கருமணியே
ஏரார் பருவ மூன்றில் உமை இனிய
முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலைமொழிக்குருந்தே என்னு
ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமானே
நின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்
செல்வத்திற் பிறங்குவரே. 12

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தகுசீர் அதிகையருட் டலத்தி னோங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத்திறத்தால்வாய்மை
உருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென் றொருபேர்பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படை கைகொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனிதனேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே. 13

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பேருரும் பரவைமனப் பிணக்கற எம்பெருமானை
ஊருரும் பலபுகல ஓரிரவில் தூதனெனத்
தேருருந் திருவாரூர்த் தெருவு தொறும் நடப்பித்தாய்
ஆரூரா நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே. 14

Koviloor Digital Library

மாணிக்கவாசக சுவாமிகள்

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்துபால்கலந்துசெழுங்கனித்தீஞ்சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே .15

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே

(மகாதேவ மாலை)

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக்கலந்துகொண்ட வெளியேமுற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்
புரிந்தருளுங்கருணைவெள்ளப் பொற்பே அன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
கரைந்துகரைந்து உருக அவர் கருத்தி னூடே
உய்யும்நெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே. 17

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப்பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்க நிழல் பரப்பி மயற்சோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுதம் மலரவரும் மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. 18

Koviloor Digital Library

அடிமைசெயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்
கொடுமைசெயும் மனத்தாலே வருந்தி அந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்
கடுமைசெயப் பிறர் துணிந்தால் அடிமை தன்னைக்
கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனேன் என்செய்வேன் நின்
திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின்றேனே. 19

(திருக்கதவம் திறத்தல்)

கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றூர் பலனென்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றூர் மண்ணுகி நாறுகின்றூர் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனே நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் ஆங்கே
இலங்கு திருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியே என் திருநடநா யகனே. 20

(திருப்பள்ளி யெழுச்சி)

ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் மாகியன் றாகி
அம்பலத் தேசித்தி யாடல்செய் பதியே
இருமையு மளித்த என் அருட்பெருஞ் சோதி
என்னர சேபள்ளி யெழுந்தருள் வாயே. 21

Koviloor Digital Library

திருவொற்றியூர்

கல்லார்க் கிதங்கூறிக் கற்பழிந்து நில்லாமல்
எல்லார்க்கு நல்லவனே யென்னரசே நற்றருமம்
ஒல்லார் புரமெரித்த வொற்றியப்பா உன்னடிக்கே
சொல்லால் மலர்தொடுத்துச்சூழ்ந்தணிந்துவாழேனே.22

வேறு

மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டிலேனயோ
மால வன்பெறும் வாழ்வுவேண் டிலேனயோ
அன்ன வூர்திபோ லாகவேண் டிலேனயோ
அமையு மிந்திர ளுகவேண் டிலேனயோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி யஞ்சடை யெம்பிரா னொற்றி
வளங்கொள் ஊரிடை வருதியென் னுடனே. 23

வேறு

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 24

(புலால் தவிர்த்தல்)

மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற் கண்
விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி இறந்தவரை யெழுப்புகின்ற
வுறுவ னேனும்

Koviloor Digital Library

கருவாள் நையுறஇறங்காது உயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்தனேல்எங்
குருவானை எமதுசிவக் கொழுந்தானை
ஞானியெனக் கூறுறேதே 25

(அருட் பெருஞ் சோதி விளக்கம்)

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே
இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தைத்
தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்தபோகபோக் கியனுய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் சோதியென் னரசே 26

(ஆற்றுமை)

விளக்கறியா இருட்டறையிற் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்து நெடுங்காலம்
அலைந்தலைந்துமெலிந்ததுரும்பதனின்மிகத்துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடை நானேன் பிறந்தேன் அந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தைஅறி யேனே. 27

தூங்கு கின்றதே சுகமென அறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே யென்னினு மவர்பால்

Koviloor Digital Library

வாங்கு கின்றதே பொருளென வலித்தேன்
வஞ்ச நெஞ்சினுற் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடையவா எனை யுவந்துகொண் டருளே. 28

(முறையிடு)

கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன் வெறுந்தண்
ணீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினேன் உணவில்
ஆரையே யெனக்கு நிகரெனப் புகல்வேன்
அய்யகோ அடிச்சிறு நாயேன்
பேரையே யுரைக்கில் தவமெலாம் ஓட்டம்
பிடிக்குமே யென்செய்வேன் எந்தாய். 29

பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தாற்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தாற் கூடுகின்றேன் குழைவித்தாற்
குழைகின்றேன் குறித்தவூணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறக்குவித்தால்
உறங்குகின்றேன் உறங்கா தென்று
ஆட்டுவித்தா லாடுகின்றேன் அந்தோ இச்
சிறியேனு லாவ தென்னே. 30

வேறு

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக்காய்த்ததொருகாய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பியுதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினும் என் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினும்

Koviloor Digital Library

துளக்கமற உண்ணுவனே தொண்டைவிக்கிக் கொள்ளுமோ
சோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே. 31

வேறு

தடித்தவோர் மகனைத் தந்தை ஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தை யணைப்பன் இங் கெனக்குப்
பேசியதந்தையுந் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத்தாடும் புனித
நீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனி யாற்றேன். 32

(விண்ணப்பம்)

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினு லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர் என்
னேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன். 33

வேறு

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்

Koviloor Digital Library

செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே. 34

வாழையடி வாழையென வந்த திருக் கூட்ட
மரபினில் யானொருவன் அன்றோ
வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடுனுனக்குத் திருவுளச் சம்மதமோ
இது தகுமோ இது முறையோ
இது தருமந்தானோ
மாழை மணிப் பொதுநடஞ்செய் வள்ளால்
யான் உனக்கு மகன் அலனோ நீ எனக்கு
வாய்த்த தந்தை யலையோ
கோழை யுலகுயிர்த்துயரம் இனிப் பொறுக்க
மாட்டேன் கொடுத்தருள் நின்னருள் ஒளியைக்
கொடுத்தருள் இப்பொழுதே 35

(அருள் விளக்க மாலை)

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே. 36

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே

Koviloor Digital Library

நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும் இசையுமணிந் தருளே. 37

(பரமசிவ நிலை)

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்து கின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந்தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணை நிதித்தெய்வமுற்றும் காட்டுவிக்குந்தெய்வம்
சேயாக எனைவளர்க்கும் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதேதெய்வம்.38

(சமரச நிலை)

எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குத லறிந்தனன் எல்லாம்
சம்மத மாக்கிக் கொள்கின்றேன் அல்லால்
தனித்துவே றெண்ணிய துண்டோ
செம்மல் உன்பாதம் அறியநா னறியேன் சிறிதுமிங்
கினித்துய ராற்றேன்
இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள
தியற்றுவதுன்கடன் எந்தாய். 39

(இரு வண்ணப் பதிகம்)

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்
எய்துக பிறப்பில் இனிநான்
எய்தாமை எய்துகினு மெய்திடுக இருமையினும்
இன்ப மெய்தினு மெய்துக

Koviloor Digital Library

வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும் வருக
வறுமைவருகினும்வருக மதிவரினும் வருக அவ
மதிவரினும் வருக உயர்வோடு
இழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருக அல
தெது போகினும் போகநின்
இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே
கழிவகைப் பலரோக நீக்குநல் அருளெனும்
கதிமருந் துதவு நிதியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ்சித பாதனே. 40

சந்ததம் எனக்குமகிழ் தந்தைநீ யுண்டுநின்
றன்னிடத் தேம வல்லி
தாயுண்டு நின்னடிய ரென்னும்நற் றமருண்டு
சாந்தமெனும் நேய ருண்டு
புந்திகொள் நிராசையாம் மனைவியுண்டு அறிவெனும்
புதல்வனுண்டு இரவு பகலும்
போனவிட முண்டு அருட் பொருளுமுண்டு ஆனந்த
போகபோக் கியமும் உண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண்டு அக்கமா
மணியுமுண்டு அஞ்செ ழுத்தாம்
மந்திரப் படையுண்டு சிவகதியெ னும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வும் உண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகவம் பலநாத கருணையங் கணபோத
கமல குஞ் சித பாதனே. 41

Koviloor Digital Library

(நடராஜபதி மாலை)

காயெலாங் கனியெனக் கனிவிக்கு மொருபெருங்
 கருணை யமுதே எனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
 காட்சியே கனக மலையே
தாயெலா மனையஎன் தந்தையே ஒருதனித்
 தலைவனே நின்பெரு மையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
 சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாந் தித்திக்கும் மனமெலாந் தித்திக்கும்
 மதியெலாந் தித்திக்கும் என்
மன்னியமெய் யறிவெலாந் தித்திக்கும் என்னில் அதில்
 வரும் இன்பம் என்புகலு வேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
 தோன்றிட விளங்கு சுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
 ஜோதிநட ராஜ குருவே.

வைத்தியநாதர் பதிகம்

இளவேனில் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
 இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
ஏற்றசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்
 இலங்கும் அரமிய அணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்
 தழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
 தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்தகற் புடையமட வரல்புடை
 கலந்தநய வார்த்தை யுடனாய்க்

Koviloor Digital Library

களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடிக்
கழனிழற் சுகம் நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 43

(வாய்ப்பறை யார்த்தல்)

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்துநெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே யென்று
வனைந்து வனைந் தேத்தும்நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே, 44

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருண மிதுவே
வானுரைத்த மணிமன்றில் நடம்புரியெம் பெருமான்
வரவெதிர் கொண்டவனருளால் வரங்களெலாம் பெறவே
தேனுரைக்கும் உளமினிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் னுடனெழுமின் சித்திபெறலாகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தா லெடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையுஞ் சுகத்தினைநீர் தானடைதல் குறித்தே. 45

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோ மென்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப்பார்க்கவு நேரீர்

Koviloor Digital Library

கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக்குறியீர்
எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே 46

உறுதி கூறல்

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்துவீணே நீர் அழிதல் அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்த ரவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே. 47

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர்
அகங்காரப் பேய்பிடித்தீர் ஆடுதற்கே யறிவீர்
கூற்றுவருங் கால் அதனுக்கெது புரிவீர் ஐயோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே
வேற்றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற உலகீர்
வீணுலகக் கொடுவழக்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க எனதுதனித் தந்தைவரு கின்ற
தருணமிது சத்தியஞ்சிற் சத்தியைச் சார்வதற்கே.48

(பராபரன் உண்மை நிலையம்)

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந்
தம்முயிர்போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த

Koviloor Digital Library

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தை மிக விழைந்த தாலோ. 49

கீர்த்தனை

நல்ல மருந்திம் மருந்து—சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து நல்ல

1. அருள்வடி வான மருந்து—நம்முள்
அற்புத மாக அமர்ந்த மருந்து
இருளற வோங்கும் மருந்து—அன்பர்க்
கின்புரு வாகஇருந்த மருந்து. நல்ல

2. சஞ்சலந் தீர்க்கும் மருந்து—எங்குந்
தானேதா னாகித் தழைக்கும் மருந்து
அஞ்சலென் றருளும் மருந்து—சச்சி
தானந்த மாக அமர்ந்த மருந்து. நல்ல

3. வித்தக மான மருந்து—சதுர்
வேத முடிவில் விளங்கும் மருந்து
தத்துவா தீத மருந்து—என்னைத்
தானாக்கிக் கொண்ட தயாள மருந்து. நல்ல

4. பிறப்பை யொழிக்கும் மருந்து—யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து—என்னுள்
என்றும் மதுரித் தினிக்கும் மருந்து. நல்ல

5. நானது வாகும் மருந்து—பர
ஞான வெளியில் நடிக்கும் மருந்து
மோன வடிவாம் மருந்து—ஜீவன்
முத்தர் உளத்தே முடிக்கும் மருந்து. நல்ல

Koviloor Digital Library

6. புத்தமு தாகும் மருந்து—பார்த்த
போதே பிணிகளைப் போக்கும் மருந்து
பத்தர் அருந்தும் மருந்து—அனு
பானமுந் தானும் பரம மருந்து. நல்ல

7. மாலயன் தேடும் மருந்து—முன்னம்
மார்க்கண்ட ரைக்காக்க வந்த மருந்து
காலனைச் சாய்த்த மருந்து—தேவர்
காணுங் கனவினுங் காணா மருந்து. நல்ல

8. புண்ணியர்க் கான மருந்து—பரி
பூரண மாகப் பொருந்தும் மருந்து
எண்ணிய இன்ப மருந்து—எம
தெண்ணமெல் லாமுடித் திட்ட மருந்து. நல்ல

9. செல்வந் தழைக்கும் மருந்து—என்றும்
தீரா வினையெலாம் தீர்த்த மருந்து
நல்வந் தனைகொள் மருந்து—பர
நாதாந்த வீட்டினும் நண்ணு மருந்து. நல்ல

10. வாய்பிடி யாத மருந்து—மத
வாதமும் பித்தமும் மாய்க்கும் மருந்து
நோய்பொடி யாக்கும் மருந்து—அன்பர்
நோக்கிய நோக்கினுள் நோக்கும் மருந்து—நல்ல

11. பெண்ணாசை தீர்க்கும் மருந்து—பொருள்
பேராசை யெல்லாம் பிளக்கும் மருந்து
மண்ணாசை தீர்க்கும் மருந்து—எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்தும் மருந்து. நல்ல

12. என்றுங் கெடாத மருந்து—வரும்
எல்லாப் பிணிக்கும் இதுவே மருந்து
துன்றுஞ் சிவோக மருந்து—நம்மைச்
சூழ்ந்திரு மைக்கும் துணையா மருந்து. நல்ல

Koviloor Digital Library

13. மறந்தா லொளிக்கும் மருந்து—தன்னை
மறவா தவருள் வழங்கும் மருந்து
இறந்தா லெழுப்பும் மருந்து—எனக்
கென்றுந் துணையா யிருக்கும் மருந்து. நல்ல

14. கரும்பில் இனிக்கும் மருந்து—கடுங்
கண்டகர்க் கெல்லாங் கசக்கும் மருந்து
இரும்பைக் குழைக்கும் மருந்து—பேர்
இன்ப வெள்ளத்தே யிழுக்கும் மருந்து. நல்ல

15. மூவர்க் கரிய மருந்து—செல்வ
முத்துக் குமாரனை ஈன்ற மருந்து
நாவிற் கினிய மருந்து—தையல்
நாயகி கண்டு தழுவு மருந்து. நல்ல

வெண்ணிலா

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே.

நாதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

சச்சிதா னந்தக்கடலில் வெண்ணிலாவே—நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே—நானும்
இருக்க எண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே.

தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே—நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலாவே.

Koviloor Digital Library

போதநடு வூடிருந்த வெண்ணிலாவே—மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே—அருள்
ஆளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே.

அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே—எங்கள்
அய்யர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே.

வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—மல
வேதையுள வேதுசொல்லாய் வெண்ணிலாவே.

குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே—அந்த
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

(ஆடிய பாதம்)

ஆடிய பாத மன்ருடிய பாதம்
ஆடிய பாதம் நின்ருடிய பாதம். ஆடிய

1. பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் நேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம். ஆடிய

2. தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்க ளெல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகி வந்தபொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம். ஆடிய

3. ஆரா அமுதாகி அண்ணிக்கும் பாதம்
அன்பர் உளத்தே அமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணிய பாதம்
நான்புனை பாடல் நயந்த பொற்பாதம். ஆடிய

Koviloor Digital Library

4. நல்லவ ரெல்லாம் நயக்கின்ற பாதம்
நாதமுடிவில் நடிக்கின்ற பாதம்
வல்லவர் சொல்லெல்லாம் வல்லபொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம். ஆடிய

5. எச்சம யத்தும் இலங்கிய பாதம்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்
அச்சந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம். ஆடிய

6. தேவர்க ளெல்லாருஞ் சிந்திக்கும் பாதம்
தெள்ளமு தாயுளந் தித்திக்கும் பாதம்
மூவருங் காணு முழுமுதற் பாதம்
முப்பாலுக் கப்பால் முளைத்த பொற்பாதம். ஆடிய

7. துரிய வெளிக்கே உரிய பொற்பாதம்
சுகமய மாகிய சுந்தரப் பாதம்
பெரிய பொருளென்று பேசும் பொற்பாதம்
பேரெல்லாந் தந்த பெரும்புகழ்ப் பாதம். ஆடிய

8. சாகா வரந்தந்த தாரக பாதம்
சச்சிதா னந்த சதோதய பாதம்
தேகாதி யெல்லாஞ் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம். ஆடிய

9. ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்று யிரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்திற் றூக்கிய பாதம்
துரியத்தி லூன்றித் துலங்கிய பாதம். ஆடிய

10. அருட்பெருஞ் சோதிய தாகிய பாதம்
அம்மையும் அப்பனு மாகிய பாதம்

Koviloor Digital Library

பொருட்பெரும் போகம் புணர்த்திய பாதம்
பொன்வண்ண மாகிய புண்ணிய பாதம். ஆடிய

வேறு

பாடற்கினிய வாக்களிக்கும்
பாலுஞ்சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தம்
கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சேநீ
அஞ்சேல் என்மேலாணை கண்டாய்
தேடற்கினிய சீரளிக்குஞ்
சிவாயநம வென்றிடும் நீறே.

